# வருடாந்த அறிக்கை 2015

சுற்றுலா அபிவிருத்தி நிதியம்



# சுற்றுலா அபிவிருத்தி நிதியம்
# வருடாந்தக் அறிக்கை - 2015

Invest in Sri Lanka

இலங்கை சுற்றுலா
அபிவிருத்தி அதிகார சபை

**2016 ஆகஸ்ட் 30 ஆம் திகதி**

**கௌரவ ஜோன் அமரதுங்க**
**சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்**

**கௌரவ அமைச்சர் அவர்கட்கு,**

**குறிப்பு: சுற்றுலா அபிவிருத்தி நிதியம்**

சுற்றுலா அபிவிருத்தி நிதியம் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. குறித்த சட்டத்தின் 23 (1) ஆம் பிரிவுக்கு இணங்க இந்த நிதியத்தின் நிதி சார்ந்த வளங்கள் சுற்றுலாவின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்ற விடயத்தை தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். இந்த நிதியத்திற்கு நிதிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அந்த நிதிகளைப் பகிர்ந்தளித்தல் முதலிய அம்சங்கள் கூறப்பட்ட 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்திற்கு இணங்க தீர்மானிக்கப்படுகின்றன.

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 23 (2) ஆம் பிரிவுக்கு இணங்க, சிவில் விமான சேவைகள் அதிகார சபை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு 1/3 மடங்கு சுற்றுலாப் பயணிகள் வருகை வரிகளை செலுத்துகின்றது. மேலும் நிதிகள் ஒரு காலாண்டு அடிப்படையில் சுற்றுலா அபிவிருத்தி வரியாக - கம்பனிகளின் மூலம் கூறப்பட்ட அந்த நிதியத்திற்குச் செலுத்தப்படுகின்றன.

2015 சனவரி முதல் திசம்பர் வரையான காலப்பகுதிற்குரிய மொத்த சுற்றுலா அபிவிருத்தி வரி 2994.15மில்லியன் ரூபாவாகவிருந்தது. 2014 ஆம் ஆண்டில் இது 2837.43மில்லியன் ரூபாவாகவிருந்தது.

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்குறித்த நிதியத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதிகளினதும் மற்றும் அந்த நிதியத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதிகளினதும் விபரங்கள் இந்த அறிக்கையில் உள்ளடங்குகின்றன.
நன்றி,

**இங்ஙனம் உண்மையுள்ள,**

**ஒப்பம்:**
**பி.எம். விதான**
**தலைவர்**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை**

## உள்ளடக்கம்


| | பக்க இல: |
|---|---|
| அறிமுகம் | 01 |
| நிதி நிலைக் கூற்று | 02 |
| நிதி சார்ந்த செயலாற்றுகை பற்றிய கூற்று | 03 |
| காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று | 04 |
| கணக்குகளுக்கான குறிப்புகள் | 05-08 |

# அறிமுகம்

'சுற்றுலா அபிவிருத்தி நிதியம்' 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 23 (1) ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டது. இந்த நிதியம் சுற்றுலாவின் அபிவிருத்திற்கும் அதன் மேம்பாட்டிற்கும் பயன்படுத்த வேண்டியதாகும்.

இந்த நிதியம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் நிருவகித்து முகாமை செய்யப்படுகின்றது.

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 23 (2) ஆம் பிரிவுக்கு இணங்க, சிவில் விமான சேவைகள் அதிகார சபை 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் 1/3 மடங்கு சுற்றுலாப் பயணிகள் வருகை வரியை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்துகின்றது. இந்த நிதி சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு வரவு வைக்கப்படுகின்றது.

மேலும், இந்த நிதிகள் 2003 இன் 23 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டு, அறவிடப்பட்டு சேகரிக்கப்படும் ஒரு சுற்றுலா அபிவிருத்தி வரியாக, பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சுற்றுலா ஸ்தாபனத்திலிருந்தும் இந்த நிதியத்திற்கு செலுத்தப்படுகின்றன.

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 24 (8) ஆம் பிரிவின் பிரகாரம், நிதியத்திற்கு வரவு வைக்கப்படும் எல்லா நிதிகளும் பின்வருமாறு செலவு செய்யப்படுதல் வேண்டும்.

a. 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் உரிய பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்திற்கு 70□ வீதமான நிதித் தொகை

b. 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்கு 12□ வீதமான நிதித் தொகை

c. 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை சுற்றுலா அதிகார சபைக்கு 14□ வீதமான நிதித் தொகை

d. 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை இணக்கல் சபைக்கு 4□ வீதமான நிதித் தொகை

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதிகளினதும் மற்றும் அந்த நிதியத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதிகளினதும் விபரங்கள் இந்த அறிக்கையில் உள்ளடங்குகின்றன.

சுற்றுலா அபிவிருத்தி நிதியம்
2015 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிதி நிலைக் கூற்று

| | குறிப்பு இலக்கம் | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| காசும் காசு ஒப்புரவுகளும் | | 429,136,130.74 | 251,099,525.02 |
| கிடைப்பனவுகள் | 8 | 670,836,597.93 | 673,329,739.00 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,099,972,728.67** | **924,429,264.02** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| கொடுமதிகள் | 9 | 3,186,569.53 | 3,380,858.23 |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | | 153,550,062.27 | 128,946,776.81 |
| இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் | | 767,750,311.48 | 644,733,884.06 |
| இலங்கை ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | | 131,614,339.11 | 110,525,808.69 |
| இலங்கை இணக்கல் சபை | | 43,871,446.28 | 36,841,936.23 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,099,972,728.67** | **924,429,264.02** |

5 தொடக்கம் 08 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகமாகும். இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து வழங்குவது பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர்கள் சபையினால் அதன் சார்பாக அங்கீகரிக்கப்பட்டன.

மல்ராஜ் பீ. கிரியெல்ல
**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை**

பி.என். திஸாநாயக்க
**பணிப்பாளர் /நிதி முகாமையாளர்**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை**

பி.எம். விதானதலைவர்
**தலைவர்**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை**

தலைவர் சுற்றுலா அபிவிருத்தி நிதியம்

2015 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிதி சார்ந்த செயலாற்றுகை பற்றிய கூற்று

| | குறிப்பு இலக்கம் | 2015 ‘ரூ. | 2014 ‘ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வரிகள் | 3 | 2,983,314,283.87 | 2,785,332,979.95 |
| ஏனைய வருமானம் | 4 | 10,839,483.91 | 52,099,002.02 |
| **மொத்த வருமானம்** | | **2,994,153,767.78** | **2,837,431,981.97** |
| **செலவுகள்** | | | |
| நிதியத்தின் நிருவாக ஆகுசெலவு | 5 | 5,402,967.77 | 5,182,686.97 |
| நிதி சார்ந்த ஆகுசெலவு | 6 | 33,010.00 | 26,922.96 |
| நிதியத்தின் பட்டுவாடாக்கள் | 7 | 2,988,717,790.01 | 2,832,222,372.04 |
| **மொத்தச் செலவுகள்** | | **2,994,153,767.78** | **2,837,431,981.97** |
| குறித்த காலத்திற்கான மிகைகள்/ (பற்றாக்குறை) | | - | - |

சுற்றுலா அபிவிருத்தி நிதியம்
2015 திசம்பர் 31 ஆம் திகதிற்கான காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

| | 2015 ‘ரூ. | 2014 ‘ரூ. |
|---|---|---|
| **இயக்கச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | |
| வருமதிகள் | | |
| **வரிவிதிப்பு** | **2,999,568,742.08** | **2,766,453,590.82** |
| ஏனைய வருமதிகள் | - | 40,000,404.00 |
| **கொடுப்பனவுகள்** | | |
| கடன் தரப்புகளுக்கு செலுத்தப்பட்ட தொகை | (2,818,764,956.85) | (3,370,720,222.26) |
| ஏனைய கொடுப்பனவுகள் | (2,767,179.51) | (7,523,347.26) |
| **இயக்கச் செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **178,036,605.72** | **(571,789,574.70)** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | |
| பொறித்தொகுதிகள், உபகரணங்கள் கொள்வனவு | - | - |
| பொறித்தொகுதிகள், உபகரணங்கள் விற்பனையிலிருந்து கிடைத்த வருமதிகள் | - | - |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **-** | **-** |
| **நிதியீட்டல் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | |
| பற்றுக்களிலிருந்து கிடைத்த வருமதிகள் | - | - |
| பற்றுக்களின் மீள்கொடுப்பனவு | - | - |
| அரசாங்கத்திற்கான பகிர்ந்தளிப்பு / பங்குலாபம் | - | - |
| **நிதியீட்டல் செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **-** | **-** |
| **காசும் காசு ஒப்புரவுகளிலுமுள்ள தேறிய அதிகரிப்பு / (குறைவு)** | **178,036,605.72** | **(571,789,574.70)** |
| **குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும்** | **251,099,525.02** | **822,889,099.72** |
| **குறித்த ஆண்டு இறுதியிலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும்** | **429,136,130.74** | **251,099ஈ525.02** |

## கணக்குகளுக்கான குறிப்புகள்

### 1. சுற்றுலா அபிவிருத்தி நிதியம்

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 23 (l) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்தி நிதியம் தாபிக்கப்படுதல் வேண்டும். இந்த நிதியம் சுற்றுலாவின் அபிவிருத்திற்கும் மேம்பாட்டிற்கும் பயன்படுத்தப்படுதல் வேண்டும். சு.அ.நி. நிதி சேகரிப்பும் செலவுப் பட்டுவாடாவும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்திற்கும் மற்றும் 2003 இன் 28 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்திற்கும் இணங்க மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

### 2. கணக்கீட்டுத் தேவைப்பாடு

நிதியத்தின் கணககுகள் இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

### 3. வரிகள்-நிதியத்தின் வளங்கள்

| | 2015‘ரூ. | 2015‘ரூ. |
|---|---:|---:|
| சுற்றுலாப் பயணிகள் வருகை வரி | 1,968,541,098.67 | 1,779,766,146.71 |
| சுற்றுலா அபிவிருத்தி வரி | 1,014,773,185.20 | 1,005,566,833.24 |
| **மொத்தம்** | **2,983,314,283.87** | **2,785,332,979.95** |

**3.1 சுற்றுலாப் பயணிகள் வருகை வரி**
சுற்றுலா சட்டத்தின் 23 (2) (ய) பிரிவுக்கு இணங்க சிவில் விமான சேவைகள் அதிகார சபையிலிருந்து இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு 1/3 மடங்கு சுற்றுலாப் பயணிகள் வருகை வரி செலுத்தப்பட்டது.

| சுற்றுலாப் பயணிகள் வருகை வரி [EL] | Rs: |
|---|---:|
| 2015சனவரி முதல் ஒற்றோபர் மாதம் வரை கிடைத்த வரித் தொகை | 1,631,276,206.74 |
| 2015நவம்பர் முதல் திசம்பர் வரை கிடைக்க வேண்டிய (ஏற்பாடு) வரித் தொகை | 337,264,891.93 |
| **2015 ஆம் ஆண்டிற்கான மொத்த சுற்றுலாப் பயணிகள் வருகை வரி** | **1,968,541,098.67** |

### 3.2 சுற்றுலா அபிவிருத்தி வரி

2003 இன் 28 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்திற்கு இணங்க, ஒவ்வொரு சுற்றுலா ஸ்தாபனமும் சுற்றுலா அபிவிருத்தி வரியைச் செலுத்த வேண்டும். சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் சேகரிக்கப்படும் இந்த வுனுடு வரி மூலம் கிடைக்கும் நிதி சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும். 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் திசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 737 மில்லியன் ரூபா, சுற்றுலா அபிவிருத்தி வரி சேகரிக்கப்பட்டது. மேலும் 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் முதல் திசம்பர் மாதம் வரையான காலப்பகுதிற்கு 333 மில்லியன் ரூபா மதிப்பீட்டுத் தொகையும் பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் முதல் திசம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் கிடைத்த உண்மையான பெறுகை விபரங்களைப் பயன்படுத்தி இந்தத் தொகை TDL சார்பாக எதிர்வுகூறப்பட்டுள்ளது.

| சுற்றுலா அபிவிருத்தி வரி [TDL] | ‘ரூ. |
|---|---|
| 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் திசம்பர் மாதம் வரை கிடைத்த வரித் தொகை | 737,301,503.18 |
| 2015 ஒற்றோபர் மாதத்திற்குக் கிடைத்த [ஏற்பாடு] வரித் தொகை | 333,181,941.93 |
| 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட மேலதிக நிதியேற்பாட்டு சீராக்கல் | (54,406,579.28) |
| TDL வரி மீளளிப்புகள் | (1,303,680.63) |
| **2015சனவரி மாதம் முதல் திசம்பர் மாதம் வரையான மொத்த TDL வரி** | **1,014,773,185.20** |

## 4. ஏனைய வருமானம்

பிரதானமாக நிதி அதிகார சட்டத்தின் பிரகாரம் வரிவிதிக்கத்தகு உரிய காலப் பகுதியில் வுனுடுவரியை செலுத்தத் தவறிய பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனங்களிலிருந்து அறவிடப்பட்ட தவறுகை வரி வட்டித் தொகைகள் ஏனைய வருமானத்தில் உள்ளடங்குகின்றன.

| | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|
| குறித்த ஆண்டிற்காக சேகரிக்கப்பட்ட வரித் தவறுகை மீதான வட்டி | 10,831,367.06 | 12,045,561.02 |
| இலங்கை இணைக்கல் சபையிடமிருந்து கிடைத்த மேலதிக நிதி | - | 40,000,000.00 |
| 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகள் தொடர்பில் கணக்காய்வுக் கட்டணத்திற்காக செலுத்தப்பட்ட கிடைக்க வேண்டிய உள்ளீட்டுஏயுவுவரித் தொகை | 7,636.85 | - |
| கோரப்படாத மீளளிப்புத் தொகை | - | 53,037.00 |
| மிகைத் தபால்கட்டணம் | 480.00 | 404.00 |
| **மொத்தம்** | **10,839,483.91** | **52,099,002.02** |

## 5. நிதிநிருவாக ஆகுசெலவு

| | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|
| முத்திரை வரி | 68,950.00 | 65,525.00 |
| நிருவாகம் சார்ந்த செலவுகள் | 5,128,022.77 | 5,088,061.98 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 205,995.00 | 29,100.00 |
| **மொத்தம்** | **5,402,967.77** | **5,182,686.98** |

## 6. நிதி சார்ந்த ஆகுசெலவு

| | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|
| வங்கிக் கட்டணங்கள் | 33,010.00 | 26,922.96 |
| மொத்தம் | 33,010.00 | 26,922.96 |

## 7. நிதிப் பகிர்ந்தளிப்பு

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 24 (8) ஆம் பிரிவுக்கு இணங்க நிதிப் பகிர்ந்தளிப்பு மேற்கொள்ளப்பட்டது.

| | 2015 ‘ரூ. | 2014 ‘ரூ. |
|---|---|---|
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | 418,420,490.60 | 396,511,132.09 |
| இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் | 2,092,102,453.07 | 1,982,555,660.43 |
| இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | 358,646,134.74 | 339,866,684.64 |
| **இலங்கை இணக்கல் சபை** | **119,548,711.60** | **113,288,894.88** |
| **மொத்தம்** | **2,988,717,790.01** | **2,832,222,372.04** |

## 8. வருமதிகள்

| | 2015 ‘ரூ. | 2014 ‘ரூ. |
|---|---|---|
| கிடைக்க வேண்டிய சுற்றுலாப் பயணிகள் வருகை வரி | 337,264,891.93 | 285,417,854.56 |
| கிடைக்க வேண்டிய வுனுடு வரி | 333,181,941.93 | 387,588,521.21 |
| கிடைக்க வேண்டிய கடன்கள் | 382,127.22 | 323,363.23 |
| 2012மற்றும்2013ஆம் ஆண்டுகளுக்கு கணக்காய்வுக் கட்டணம் தொடர்பில் செலுத்தப்பட்ட கிடைக்க வேண்டிய உள்ளீட்டு ஏயுவுவரித் தொகை | 7,636.85 | - |
| **மொத்தம்** | **670,836,597.93** | **673,329,739.00** |

## 9. கொடுமதிகள்

| | 2015 ‘ரூ. | 2014 ‘ரூ. |
|---|---|---|
| அட்டுறு செலவுகள் - நிருவாகக் கட்டணம் | 3,045,774.53 | 3,022,527.95 |
| அட்டுறு செலவுகள் - கணக்காய்வுக் கட்டணம் | 117,345.00 | 58,200.00 |
| அட்டுறு செலவுகள் - முத்திரை வரி | 23,450.00 | 65,525.00 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் | | - |
| **மொத்தம்** | **-** | **234,605.28** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ரீஜபீ/ஏ/ரீடிஎவ் /1/15/01 මබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2016 ஆகஸ்ட் 10

தலைவர்,

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை.

**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் நிறுவனமொன்றினால் முன்னைய காலப்பகுதிகளில் இடம்பெற்றுள்ள பொருண்மையான தவறுகளை கண்டறிந்ததன் பின்னர் வெளியிடப்படுகின்ற முதலாவது நிதிக்கூற்றுத் தொகுதியிலேயே முன்னோக்கிய சீராக்கம் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், முன்னைய 02 ஆண்டுகளுக்குரிய சுற்றுலா அபிவிருத்தி வரி மிகை நிதியேற்பாடான ரூபா 54,406,579 முன்னோக்கியதாக மீள வெளிப்படுத்தலாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டம் | |
| i. 24(3) ஆம் பிரிவு | சுற்றுலா அபிவிருத்தி வரியை முகாமைத்துவப்படுத்துவதற்கும் நிர்வகிப் பதற்குமான விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. 24(8) ஆம் பிரிவு | சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டுள்ள சகல நிதிகளும் உரிய நிறுவகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதியத்தின் செலவில் ரூபா 429,136,130 தொகையான பணம் காணப்பட்ட போதிலும் அப்பணத்தை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 2(ஆ) ஆம் உப பிரிவு | இலங்கையிலிருந்து வெளிச்செல்லும் கப்பலில் இலங்கையிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு பயணிக்காகவும் வழங்கப்படும் ஒவ்வொரு கப்பற்சீட்டிலிருந்தும் வரி அறவிடப்பட்டு இதில் ஒரு பகுதி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு கப்பலில் பயணிக்கும் பயணிகளிடமிருந்து வரி அறவிடப்பட்டு அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிராததுடன் கப்பலில் பயணிக்கும் பயணிகளிடமிருந்து அறவீடுகள் இல்லை என்பதற்கான உறுதிப்படுத்தல்களும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) நிதிப் பிரமாண இலக்கம் 169(2) | காசோலை தேறுவதற்கு முன் நிறுவனம் சேவை வழங்கிய 07 காசோலைகளுக்குரிய ரூபா 143,504 தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய வருமானம் ரூபா 2,994,153,768 ஆக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் வருமானம் ரூபா 2,837,431,982 ஆனமையால் வருமானத்தில் ரூபா 156,721,786 தொகையான அதிகரிப்புக் காணப்பட்டது. குடியகல்வு வரி வருமானம் அதிகரித்தமை வருமான அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. எவ்வாறெனினும் ஏனைய வருமானங்கள் முன்னைய ஆண்டினை விட ரூபா 41,259,518 இனால் குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் நிதியத்தின் கடந்த 05 வருடங்களின் ஒட்டுமொத்த வருமானம் தொடர்ச்சியான அதிகரிப்பொன்றினைக் காட்டுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் சேகரிக்கப்படும் குடியகல்வு வரிப் பணத்தில் 1/3 பங்கு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் தொடர்பான அதிகாரச்சட்டத்தின் கீழுள்ள சுற்றுலா அபிவிருத்தி வரி நிதியத்தின் வருமானமாவதுடன், அந்த பணம் சுற்றுலா வணிகத்தின் மேம்பாடு அல்லது அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்காக இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம், இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை சம்மேளன பணியகம் போன்றவற்றிற்கு கிடைக்கும் பணத்தில் முறையே 70, 12, 14 மற்றும் 4 சதவீதம் படி வழங்குவதற்கு அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மீளாய்வாண்டினுள் நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,402,968 செலவினமொன்றினை மேற்கொண்டதன் பின்னர் எஞ்சிய பணம் மேற்படி நிறுவனங்களுக்கு முறையே ரூபா 2,092,102,453, ரூபா 358,646,135, ரூபா 418,420,491 மற்றும் ரூபா 119,548,712 வழங்கப்பட்டிருந்தன. இந்த பணம் குறித்த நிறுவனங்களால்

மேற்படி நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டதா என்பதை பின்தொடர்வதற்கான நடைமுறையொன்று நிதியத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தால் நிர்வாகச் செலவினமாக ரூபா 5,128,023 தொகை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிர்வாகச் செலவினக் கொடுப்பனவிற்கு 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2003 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 1303/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் குடியகல்வு வரியாக விமானம் மூலம் வெளிச்செல்லும் சகலரிடமிருந்தும் 15 ஐக்கிய அமெரிக்க டொலர்களும், கப்பல் மூலம் வெளிச்செல்லும் சகலரிடமிருந்தும் 2.5 ஐக்கிய அமெரிக்க டொலர்களும் அறவிடப்பட வேண்டிய போதிலும், இக் குடியகல்வு வரியை அறவிடும் சிவில் விமானச் சேவைகள் சேவை பணிப்பாளர் நாயகத்தால் 2004 ஆம் ஆண்டு முதல் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நாணய மாற்று வீதாசாரத்தில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்த போதிலும், ஒரு ஐக்கிய அமெரிக்க டொலருக்கு ரூபா 100 எனும் அந்நிய செலாவணிப் பரிமாற்ற அடிப்படையில் இவ் வரி அறவிடப்பட்டிருந்தமையால் இந்த காலப்பகுதியினுள் அண்ணளவாக ரூபா 300,000,000 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(இ) சுற்றுலா அபிவிருத்தி வரியை அறவிட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பான தரவு நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒவ்வொரு ஆண்டிலும் அறவிடப்பட்ட வரி மற்றும் நிறுவனங்களது விற்பனை வருமானம் என்பன பதிவு செய்யப்படாமையால் நிலுவையான வரி தொடர்பான கண்காணிப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

(ஈ) 2003 திசெம்பர் 11 ஆம் திகதிய 1318/24 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 1 ஆம் 4 ஆம் பந்திகளிலுள்ள கட்டளைகளின் பிரகாரம், சுற்றுலா வரித் தொகை

குறிப்பிட்ட காலப் பகுதியில் செலுத்தாதோருக்கு விதிக்கப்படும் தண்டப்பணம் போதியளவானதாக இல்லாமையினால் சுற்றுலா வரிப்பணத்தை செலுத்துவதனை ஊக்கப்படுத்துவதற்கு தாக்கமளித்திருக்கவில்லை.

(உ) 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 4(2) ஆம் பிரிவின் பிரகாரம் விமானக் கம்பனியால் குறித்த காலப்பகுதியின் போது வரி செலுத்தப்பட்டிராத சந்தர்ப்பங்களில் குறித்த தண்டப்பண வட்டியுடன் அத்தொகை அறவிடப்பட்டு அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டதா என்பனை உறுதிப்படுத்துவதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆம் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

நிதியத்தின் பிரதான 2 வருமான மூலங்களான குடியகல்வு வரி வருமானம் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் போன்றவற்றை சேகரித்தல், நிலுவை வரி வருமானத்தை கணிப்பிடல், வரி வருமானத்தை கணக்கு வைத்தல் மற்றும் வரி அறவிடும் முறைமைகளிலான கட்டுப்பாட்டு நலிவுகளை இனங்காணுவதற்கு உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களிடையே 05 விடயங்கள் தொடர்பில் 7 சதவீதத்திலிருந்து 59 சதவீதம் வரை கருத்திற்கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் ஈடுபடுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. வருமான சேகரிப்பிலான கட்டுப்பாடுகள் தொடர்பில் சுற்றுலா அபிவிருத்தி வரி மற்றும் குடியகல்வு வரி வருமானங்களை குறிப்பாக இனங்காணல் மற்றும் அவற்றின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்குரிய முறைமையொன்றை ஒழுங்கமைத்தல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

